**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண்.450 நாள்: 07.09.2026

**வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, மணலி மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் வளர்ச்சிப் பணிகளை வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, அம்பத்தூர் மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் வளர்ச்சிப் பணிகளை வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., அவர்கள், இன்று (07.09.2026) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, மணலி மண்டலம், வார்டு-22க்குட்பட்ட நாமகார முனியன் தெருவில் உள்ள மழைநீர் வடிகாலில் இருந்து வண்டல்கள் அகற்றும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதனைத் தொடர்ந்து, வார்டு-16க்குட்பட்ட சடையான்குப்பம் பகுதியில் கட்டப்பட்டு வரும் சென்னை நடுநிலைப் பள்ளி கட்டுமானப் பணி, கன்னியம்மன்பேட்டையில் உள்ள சென்னை தொடக்கப் பள்ளி மற்றும் பள்ளி வளாகத்தில் பள்ளி மாணவர்களின் காலை உணவுத் திட்டத்திற்கான மைய சமையல் கூடம், வார்டு-19க்குட்பட்ட மாதூர் பகுதியில் பள்ளி மாணவர்களின் காலை உணவுத் திட்டத்திற்கான மைய சமையல் கூடத்தின் இறுதிக் கட்டப் பணிகள் உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, கட்டுமானப் பணிகளை விரைந்து முடித்திடவும், மழைநீர் வடிகால் மற்றும் வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் இருந்து வண்டல்கள் அகற்றும் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ளவும், பள்ளி மாணவர்களின் காலை உணவுத் திட்டத்திற்கான மைய சமையல் கூடத்தில் தயாரிக்கும் உணவு தரமாக மேற்கொள்ளவும், உணவுப் பொருட்களின் இருப்பு மற்றும் சமையலறையினைத் தூய்மையாகப் பராமரித்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது, மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**